1981 மார்ச் 6] [பேரவைத் துணைத் தலைவர்]

"1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த)ச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (7–3–1981) 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

219. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7 ஆம் தேதியிடப்பெற்ற 32 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1980) 21(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1981 மார்ச் 6

220. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு-கூட்டுறவுத் துணையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதியிடப்பெற்ற 648 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119(4) விதியின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

60. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டம் முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981).

61. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981).

62. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981).

63. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல் (திருத்தச் சட்ட முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981).

64. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981).

65. 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).